DINAMALAR

PAGE NO: 02 DATE: 07.12.2023

# உலக தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக் கழகம்



உலக பல்கலைக்கழகங்கள் தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பிடித்ததற்கான சான்றிதழ் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**புதுச்சேரி, டிச. 7–**

உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பிடித்துள்ளது.

கியூ.எஸ்., என்ற அமைப்பு உலக பல்கலைக் கழக தரவரிசை வெளியிட்டுள்ளது. இதில், உலக அளவில் சுற்றுச்சூழல், சமூகம், ஆளுமை சிக்கல்களை தீர்க்க பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் கியூ.எஸ்., 2024ம் ஆண்டிற்கான தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக் கழகம் இந்திய அளவில் 24 இடத்தையும், ஆசிய அளவில் 221வது இடத்தையும் பிடித்துள்ளது.

கியூ.எஸ்., உலக பல்கலைக் கழக தரவரிசை குழு உறுப்பினர் ஸ்ரீநிவா சமூர்த்தி, பேராசிரியர் அருண்பிரசாத், பொறியாளர் முருகவேல், இளையபாரதி, ஞானவேல், நந்திவர்மன், துணை ஒருங்கிணைப்பாளர் விஷ்ணுவரதன் ஆகியோர் தரவரிசை சான்றிதழை புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் (பொ) தரணிகரசுவிடம் வழங்கினர்.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 07.12.2023

# உலக பல்கலை தரவரிசையில் புதுச்சேரி பல்கலை முன்னேற்றம்



க்யூஎஸ் தரவரிசை சான்றிதழை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) பேராசிரியர் தரணிக்கரசுவிடம் குழு உறுப்பினர்கள் வழங்கினர்.

**புதுச்சேரி, டிச. 7:** புதுச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகம் நிலைத்தன்மை 2024ல் க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையில் முன்னேறுகிறது. 2024ம் ஆண்டிற்கான க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையின் 2வது பதிப்பை வெளியிட்டது. இந்த தரவரிசை கட்டமைப்பானது, உலகளாவிய சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை சிக்கல்களைத் தீர்க்க பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு முயற்சிகளை காட்டுகிறது. க்யூஎஸ் நிலைத்தன்மை தரவரிசை 2024ல் புதுச்சேரி பல்கலைக்கழகம், இந்திய பல்கலைக்கழகங்களில் ஈர்க்கக்கூடிய 24வது இடத்தை அடைவதில் பெருமை கொள்கிறது. ஆசிய நிறுவனங்களில் 221வது இடத்தையும் உலக தரவரிசை 801-820வது இடத்தையும் பெற்றுள்ளது. இந்த முக்கியமான தலைப்பின் முக்கியத்துவத்தை எதிர்கால சந்ததி புரிந்துகொள்வதை உறுதி செய்யும் வகையில் நிலைத்தன்மை ஆராய்ச்சி, கற்பித்தல், நிர்வாகம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் பல்கலைக்கழகம் நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துள்ளது. க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை குழு உறுப்பினர்கள் பேராசிரியர்கள் ஸ்ரீநிவாசமூர்த்தி, அருண் பிரசாத், பொறியாளர் முருகவேலு, இளையபாரதி, ஞானவேல், முனைவர் நந்திவர்மன், ஐக்யூஏசி துணை ஒருங்கிணைப்பாளரும், தரவரிசை ஒருங்கிணைப்பாளருமான விஷ்ணு வர்தன் ஆகியோர் க்யூஎஸ் தரவரிசை சான்றிதழை புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) பேராசிரியர் தரணிக்கரசுவிடம் வழங்கினர். துணைவேந்தர் தரணிக்கரசு கூறும்போது, நாளைய உலகின் தலைவிதி, இன்று நாம் செய்யும் செயல்களை பொறுத்தது என்று வலியுறுத்தினார். உள்ளூர், தேசிய மற்றும் உலக அளவில் கல்வி, ஊக்கம் மற்றும் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தனித்துவமான நிலையை அவர் எடுத்துரைத்தார். அவர் கூறியது போல், எதிர்வரும் ஆண்டில், காலநிலை சவால்கள் மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான ஒத்துழைப்புகள், பகிர்ந்த நிபுணத்துவம், தொடர்பு, சமூக ஈடுபாடு மற்றும் பழைய மாணவர் உறவுகள் ஆகியவற்றில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

MAALAI MALAR

PAGE NO: 05 DATE: 07.12.2023



# புதுவை பல்கலைக்கழகம் உலக தரவரிசையில் முன்னேற்றம்

புதுச்சேரி, டிச.7–

உலக பல்கலைக்கழக தரவரிசையை க்யூஎஸ் வெளியிடுகிறது. இதில் புதுவை பல்கலைக்கழகம் இந்தியளவில் 24–வது இடத்தையும், ஆசிய நிறுவனங்களில் 221–வது இட்த்தையும், உலக தரவரிசையில் 801–820–ம் தரவரிசையிலும் இடம்பெற்றுள்ளது.

உலக பல்கலைக்கழக தரவரிசை உறுப்பினர்கள் சீனி வாசமூர்த்தி, அருண்பிரசாத், முருகவேலு, இளையபாரதி, நந்திவர்மன், விஷ்ணுவர்தன் ஆகியோர் தரவரிசை சான்றிதழை துணைவேந்தர் தரணிக்கரசு விடம் வழங்கி பாராட்டு பெற்றனர்.

DINAMANI

PAGE NO: 04 DATE: 07.12.2023

# உலக தரவரிசைப் பட்டியலில் புதுவை பல்கலை. முன்னேற்றம்

**புதுச்சேரி, டிச.6:** உலக தரவரிசைப் பட்டியலில் புதுவை பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

2024-ஆம் ஆண்டுக்கான உலக பல்கலைக்கழகத் தரவரிசையின் 2-ஆவது பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதில் உலகளாவிய சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை சிக்கல்களைத் தீர்க்க பல்கலைக் கழகங்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு முயற்சிகள் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், புதுவை பல்கலைக்கழகம், இந்திய பல்கலைக்கழகங்களில் 24 -ஆவது இடத்தை வகிக்கிறது. ஆசிய நிறுவனங்களில் 221 -ஆவது இடத்தையும், உலக தரவரிசையில் 801 முதல் 820 -ஆவது இடத்துக்குள்ளும் உள்ளது. உலக பல்கலைக்கழக தரவரிசை குழு உறுப்பினர்கள் பேராசிரியர் ஸ்ரீநிவாசமூர்த்தி, பேராசிரியர் த.அருண் பிரசாத் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் தரவரிசைச் சான்றிதழை புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ) ஓ. தரணிக்கரசுவிடம் புதன்கிழமை வழங்கினர்.